"DAILY THANTHI"

PAGE NO: 11

DATE: 17.09.21

### பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில்

# மாணவர் சேர்க்கைக்கு காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, செப்.17-

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி முதல்வர் சந்திரசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை மத்திய பல்கலைக்கழக கட்டுப்பாட்டில் உள்ள லாஸ் பேட்டை சமுதாய கல்லூரியில் 2021-22-ம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை இணைய வழியாக நடைபெற்று வருகிறது. இந்த மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் மாணவர்களின் நலன் கருதி இந்த மாதம் 30-ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் http://pucc.edu.in என்ற இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்கலாம்.

இளங்கலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிரி வேதியியல், ஊடகவியல், வணிகவியல் மற்றும் இளங்கலை மருத்துவ தொழில் நுட்பம், கதிர்வீச்சு மற்றும் நிழற்பட தொழில்நுட்பம், கண் பார்வை தொடர்பான தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சேவை தொழில்நுட்பம், கணினி மென்பொருள் மேம்பாட்டு தொழில்நுட்பம் போன்ற படிப்புகள். மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், சுகாதார ஆய்வாளர்கள், பத்திர எழுத்தர், யோகா மற்றும் இந்த ஆண்டு முதல் புதிதாக தொடங்கப்பட்டுள்ள நாடகம் மற்றும் அரங்கக்கலைகள், கர்நாடக இசை (பாட்டு), பரத நாட்டியக்கலை போன்ற பட்டய மற்றும் சான்றிதழ் படிப்புகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

இதில் சேருவதற்கான விவரங்களை அறிய லாஸ்பேட்டையில் உள்ள சமுதாயக்கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையங்களை நேரடியாகவோ, கல்லூரி இணையதளம் (http://pucc.edu.in) மூலமாகவோ தொடர்புகொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.